பாதிக்கப்பட்டோரின்

# குரல்...



இதழ் 01

இணைய சஞ்சிகை



## பாதிக்கப்பட்டோர் குறித்தான அடிப்படை புரிதலோடு நாம் பயணிக்கின்றோமா?

**பாதிக்கப்பட்டோர் எத்தனை பேர் ? எப்படி இருக்கின்றார்கள்....**

**எங்கெல்லாம் இருக்கின்றார்கள் ? என்ன செய்கின்றார்கள்....**

**அவர்களின் வேதனைகள் என்ன ?**

**உதவிக்கரம் எல்லோருக்கும் சமமாகவே நீட்டப்படுகின்றதா?**

**உள்ளே...**



திருமதி.செ.வனஜா




திரு.சா.அருள்மொழி



திரு.வி.ஜெயகாந்தன்

Abi Diamonds

DATA
Differently Able Tamils Association

RAJ CLUSTER LTD

## தங்க வியாபாரம்... தங்கமான மனசு...
## எங்கள் தமிழ் பரா விளையாட்டுப் போட்டியின்
## பிரதான அனுசரணையாளர்...

# Abi Diamonds
# &
# Abis Cash & Carry

தங்க வியாபாரம் பெருகுவது போல்... மாற்றுத்திறனாளிகளின்
வியாபாரத்தை பெருக்கும் நோக்கில்...
சுழற்சிமுறை மேம்பாட்டுத் திட்டத்தின் முக்கிய முதலீட்டாளர்...






**301 - 305 Northolt Road South Harrow HA2 - 8JA LONDON UK**
**Telephone : 00442084230055**



# குரல்...

வடக்கில் 20,011 மாற்றுத்திறனாளிகள் இருக்கின்றார்கள் என வடக்கு சமூக சேவை திணைக்களம் கூறுகின்றது.

கிழக்கில் எத்தனை மாற்றுத்திறனாளிகள் இருக்கின்றார்கள் என அறியக் காத்துக்கிடக்கின்றோம்.

போர் ஓய்ந்து 10 வருடங்கள் ஆகி விட்டது. போரில் பாதிக்கப்பட்டோருக்காக நாம் அனைவரும் உழைக்கின்றோம். ஆனாலும் பாதிக்கப்பட்டோர் எத்தனை பேர் என்ற அடிப்படை புரிதல் கூட நம்மிடம் இல்லை என்பது உண்மை. இது இப்படி இருக்க நாம் எமது பார்வையை பாதிக்கப்பட்டோர் சமூகம் முழுவதுக்கும் திருப்புவோமானால் இன்னமும் கேள்விகள் நீளும்.

1. மாற்றுத்திறனாளிகள்.
2. போரில் பெற்றோரை இழந்த பிள்ளைகள்.
3. போரில் பிள்ளைகளை இழந்த பெற்றோர்கள்.
4. போரில் கணவனை இழந்த பெண் தலைமைத்துவ குடும்பங்கள்.

எண்ணிக்கையை தேடி ஆரம்பிக்கும் இந்த பயணம் அவர்களின் வாழ்வியல் குறித்தும் பேசும்.

பாதிக்கப்பட்டோர் அந்த பாதிப்பினை தாங்கி வாழ்வதோடு அதனின்று மீண்டு வாழ்வதற்கு எடுக்கும் முயற்சிகளையும் இந்த குரல் பதிவு செய்யும்.

பாதிக்கப்பட்டோரில் சாதித்தோர்கள் சரித்திரத்தில் இடம் பிடிப்பார்கள்.

இருந்த போதும் இன்னமும் பல்வேறு துன்பங்களை தாங்கி நின்றுழல்வோரும் எம்மோடு வாழ்கிறார்கள், அவர்களின் மன ஓலமும் பதியப்படும்.

இந்த முயற்சியின் பயனாக அவர்களின் வாழ்வில் ஒரு சிறு ஒளியாவது ஏற்றப்பட்டால் அதுவே மன நிறைவைத் தரும்.

தொடர்ந்து குரல் ஒலிக்கும்.....

தொடர்ந்து குரல் ஒலிக்கும்.....

# மாற்றுத்திறனாளிகளின் பிரச்சினைகள் தொடர்பில் வடக்கு வட்ட மேசை மாநாட்டில் கருத்து பகிர்வு




வடக்கு மாகாணத்தில் உள்ள பொதுவான பிரச்சினைகள் மற்றும் சமூக, அரசியல், வாழ்வியல் உட்பட்ட அனைத்து பிரச்சினைகளையும் தீர்க்கும் வகையில் வடக்கு மாகாணத்தின் கௌரவ ஆளுநர் கலாநிதி.சுரேன் ராகவன் அவர்கள் மாதாந்தம் வட்ட மேசை கலந்துரையாடல் நடாத்தி வருகின்றார். இந்த கலந்துரையாடலில் சம்பந்தப்பட்ட தரப்பினர், அதிகாரிகள் மற்றும் அக்கறை உடையோர் என அனைவரும் கலந்து கொண்டு நீண்ட உரையாடலாகவும் அவற்றுக்கான தீர்வுகளை பெறும் இடமாகவும் இம் மாநாடு நடைமுறையில் உள்ளது.

அந்த வகையில் கடந்த செப்டெம்பர் 5 ஆம் திகதி தமிழ் மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் விசேட வேண்டுகோளுக்கிணங்க இலங்கையின் மாற்றுத்திறனாளிகள் தொடர்பாகவும் பாதிக்கப்பட்டோர் தொடர்பாகவும் பேசும் சிறப்பு கலந்துரையாடலாக இடம்பெற்றது. கலந்துரையாடலில் விசேட தேவை உடையவர்களுக்கான அனைத்து பிரச்சினைகளும் தொடர்புடைய அரச அதிகாரிகள் மத்தியில் வெளிப்படுத்தப்பட்டு ஆராயப்பட்டது.




குறிப்பாக அரச வேலைவாய்ப்பு, விசேட தேவை உடையவர்களுக்கான போக்குவரத்து வசதிகள், அணுகும் வசதிகள் மற்றும் தொடர்பாடல் உட்பட்ட பிரச்சனைகள் கலந்தாலோசிக்கப்பட்டது. வேலை வாய்ப்பை பொறுத்தவரை மாற்றுத்திறனாளிகளுக்கு ஏலவே இருக்கின்ற வேலை வாய்ப்பு 3வீதம் ஆகும். அதனை 6 வீதமாக மாற்றுவதற்கான மேலதிக அழுத்தத்தையும், தேவையையும், சிபாரிசையும் தான் மேற்கொள்வதாக அன்றைய கலந்துரையாடலில் கௌரவ ஆளுநர் உறுதிபட தெரிவித்தார். முக்கியமாக மாற்றுத்திறனாளிகளுக்கான அணுகும் வசதிகள் தொடர்பான விரிவான விளக்கத்தையும்,




சரியான அணுகும் வசதி இல்லாவிட்டால் ஒரு மாற்றுத்திறனாளி எவ்வகையான இடையூறுகளையும், அசௌகரியங்களையும் சந்திப்பார் என்பது தொடர்பிலும் கௌரவ ஆளுநருக்கும், சபையோருக்கும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் தமிழ் மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் முக்கிய மாற்றுத்திறனாளி உறுப்பினரான திரு.வி.ஜெயகாந்தன் அவர்கள் விளக்கம் வழங்கினார்.

விளக்கத்தை தொடர்ந்து உடனடியாகவே வடக்கின் அனைத்து பொது கட்டடங்களுக்கும் மாற்றுத்திறனாளிகளுக்கான அணுகும் வசதி இல்லாத அனுமதியை பெறமுடியாது என்று இருக்கும் கட்டடங்கள் ஆறு மாத காலத்துக்குள் மாற்றுத்திறனாளிகள் அணுகக்கூடிய வசதிகளை ஏற்ப்படுத்த வேண்டும் என்றும் சிறப்பு கட்டளையை கௌரவ ஆளுநர் பிறப்பித்திருந்தார்.




தொடர்ந்து வாய்பேச முடியாத மாற்றுத்திறனாளிகள் தமது தொடர்பாடலுக்கான மொழியறிவு உள்ளவர்களை முக்கிய அரச அலுவலகங்களில் பணிக்கமர்த்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்த போது ஆளுநர் அதனையும் ஏற்றுக் கொண்டார். தொடர்ச்சியாக பாடசாலையில் கல்வி பயிலும் சிறுவர்களான மாற்றுத்திறனாளிகள் தொடர்பான பாதிப்புக்கள், தேவைகள், சேவைகள் தொடர்பிலும் விரிவாக ஆராயப்பட்டது. இந்த இடத்தில் முக்கியமாக DATA அமைப்பினர் வடக்கில் உள்ள மாற்றுத்திறனாளிகளின் முழு விபரங்களையும் சேகரித்து பட்டியலிட்டு ஆளுநருக்கும் அதே நேரம் பங்கு பற்றிய சேவையாளர்களுக்கும் வழங்கி இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.





## வடமாகாண சமூக சேவைகள் திணைக்கள பணிப்பாளர் திருமதி.வனஜா செல்வரத்தினம் அவர்கள் தமிழ் மாற்றுத்திறனாளிகள் அமைப்பிற்கு வழங்கிய ஒலி–ஒளி வடிவ நேர்காணலின் சுருக்கமான வரிவடிவம்



சமூகத்திற்கு தேவையான நலிவுற்ற மக்களுக்கு சேவைகள் செய்கின்ற ஒரு திணைக்களமாக இத் திணைக்களம் முதியோர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் சார்ந்தவர்களை எவ்வாறு முன்நகர்த்தி செல்லலாம் என்பதற்கான வேலைத்திட்டங்கள், நடவடிக்கைகள், கடமைகள் தான் எமது திணைக்களத்தில் செய்யப்பட்டு வருகின்றது. போரினால் பாதிக்கப்பட்டவர்களுடைய எண்ணிக்கை என்பது இதுவரை எவராலும் சரியான வகையில் பெறப்படவில்லை என்பது தான் இங்கு சொல்லப்பட வேண்டும்.

ஒருமித்து எல்லோருடைய தேவைகளின் மத்தியில் மாற்றுத்திறனாளிகளை கவனிக்கின்ற போது அவர்கள் தனியொருவராக இருந்தால் அதற்குரிய புள்ளிகள் குறையும். ஆகவே அவர்களுடைய தேவை அறியப்படுத்தபட்டிருக்கின்றது. இலங்கையில் மத்திய அரசாங்கம், மாகாண அரசாங்கம் என இரண்டு இருக்கின்றது. அதில் சில நியதிகள் மற்றும் அதிகாரங்கள் எமக்கு மத்திய அரசாங்கத்தில் இருந்து மாகாண அரசாங்கத்திற்கு வழங்கப்படவில்லை.

முழுமையான அதிகாரங்கள் எமக்கு வழங்கப்பட்டு இப்படி ஒரு வேலை சமூக சேவைகள் திணைக்களத்திற்கு பொறுப்பளிக்கப்படுமாக இருந்தால் மாற்றுத்திறனாளிகளுடைய வீட்டுத்திட்டம் என்கின்ற தேவையை பூர்த்தி செய்யலாம். பல்வேறுபட்ட இடங்களில் வாழ்வாதாரம் என்பது மிகவும் கேள்விக்குறியாக தான் காணப்படுகின்றது. சார்ந்திருப்பவர்கள் அல்லது குடும்ப தலைவன், தலைவி மாற்றுத்திறனாளியாக காணப்படுகின்ற போது அவர்கள் எந்த நாளுமே வறுமைக்கோட்டிற்கு கீழ் காணப்படுகின்றார்கள்.

நாட்டிற்காக ஒன்றிணைவோம் எனும் செயற்திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணத்திற்கு ஒவ்வொரு பிரதேச செயலகங்களுக்கும் குறைந்தது ஐந்து மலசலகூடங்கள் ஏனும் தருமாறு ஜனாதிபதி செயலகத்திற்கு கேரிக்கை முன்வைத்த பொழுதிலும் குறைந்தளவான நிதி ஒதுக்கீடுகளே குறித்த அரசாங்க அதிபர்களுக்கு கிடைக்கப்பெற்றிருக்கின்றது.

மத்திய அரசாங்கத்திற்கூடாக அல்லது மாகாண சபைக்கென விசேட நிதி ஒதுக்கப்படும் சந்தர்ப்பத்தில் தான் பல்வேறுபட்ட வேலைத்திட்டங்களை, தேவைகளை இனங்கண்டு பொருத்தமான வகையில் செய்வதற்கு வாய்ப்பாக அமையும். போரினால் பாதிக்கப்பட்ட மாகாணம் என்று சொல்லப்படும் வடக்கு மாகாணத்தில் மாற்றுத்திறனாளிகள் கூடியிருப்பது உண்மை.

2009ம் ஆண்டு முடிவிற்குக் கொண்டு வரப்பட்ட போரின் பின்னர் 2018ல் இருந்த மாற்றுத்திறனாளிகளின் எண்ணிக்கையானது 2019ம் ஆண்டிலே 20,011 என்ற எண்ணிக்கை காட்டப்பட்டுள்ளது. பிரதேச செயலகங்களில் இணைப்பு செய்யப்பட்டிருக்கின்ற சமூக சேவை உத்தியோகத்தர்களினால் பெற்றுக்கொள்ளப்படுகின்ற புள்ளிவிபரத்தின் படியான கணக்கீடு தான் இது. ஐந்து மாவட்ட செயலகங்களிலும் அதுதான் காணப்படுகின்றது.

இதற்கு நாம் பல காரணங்களை கூறலாம்.

1. போரினால் பாதிக்கப்பட்ட ஒரு பகுதியினர் மாற்றுத்திறனாளிகளாகக் காணப்படாது போரினால் ஏற்பட்ட பாதிப்புக்கள் தாக்கத்தினை ஏற்படுத்தி நிரந்தர மாற்றுத்திறனாளியாக ஆக்கப்பட்டிருக்கின்றார்கள்.

2. பிறப்பிலிருந்து மாற்றுத்திறனாளி ஆக்கப்படுபவர்கள் தங்களது சுய கௌரவம் காரணமாக வீட்டில் இருக்கின்ற மாற்றுத்திறனாளி பிள்ளை தான் எனக் காட்டிக் கொடுக்காத பெற்றோர்கள்.

3. நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டு கால் முற்றாக அகற்றப்பட வேண்டிய தேவை இன்று அதிகாமானோருக்கு உள்ளது. இதனால் வருகின்றவர்களும் மாற்றுத்திறனாளிகள்.

இவ்வாறான பல்வேறுபட்ட காரணங்களினால் மாற்றுத்திறனாளிகளின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கான சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றது.

போருக்கு பின்னர் அதிகரிப்பதற்கு போர் மட்டும் காரணம் இல்லை. தினம் தினம் விபத்துக்களினால் கூட பல்வேறுபட்ட மாற்றுத்திறனாளிகள் உருவாகிக் கொண்டிருக்கின்றார்கள். மாற்றுத்திறனாளிகளின் எண்ணிக்கை இன்னும் அதிகரிப்பதற்கான சந்தர்ப்பங்கள் இருக்கின்றது என்று தான் கூற வேண்டும்.

மாற்றுத்திறனாளிகள் எல்லோருமே வலுவற்றவர்கள் என்பதனை நான் ஏற்றுக் கொள்ள முடியாது. ஏனெனின் செவிப்புலனற்றவர்கள், விழிப்புலனற்றோர்கள் பல்வேறுபட்ட தொழில்களில் ஈடுபடுகின்றார்கள். அவர்களுக்கு பணம் என்பதை கொடுப்பதன் ஊடாக அவர்களது வாழ்க்கையை விருத்தி செய்வது என்பது பிழையான விடயம். அவர்களுக்கு ஆதாரமாக சில திட்டங்களைக் கொடுக்கலாம்.

பெரும்பாலான மாற்றுத்திறனாளிகள் இலவசமாக வழங்கினால் வாழ்வோம் என்ற ஒரு கருத்திலும் இருக்கின்றார்கள். ஏனெனில் பல்வேறுபட்ட விடயம் கலந்துரையாடுகின்ற பொழுது இவ்வாறான திட்டங்களை செய்வதைவிட பணமாக வழங்கினால் சுகமாக இருக்கும் என்ற விடயம் காணப்படுகின்றது.

சுயதொழிலில் விருப்பமுடைய மாற்றுத்திறனாளிகளை நாம் பயனாளிகளாக தெரிவு செய்கின்றோம். காலப்போக்கில் எமது திட்டம் தோல்வியடைந்து விடக்கூடாது என்பதற்காக, தனியார் நிறுவனங்களை அல்லது தனியார் அமைப்புக்களை இங்கு அறிமுகப்படுத்தி நிரந்தரமான வேலைத்திட்டத்தில் அவர்களை உள்வாங்குவதன் மூலம் அரசாங்கத்திற்கு இது ஒரு சவாலான விடயமாக அமையலாம். பல்வேறுபட்ட செயற்றிட்டங்கள் ஊடாக மாற்றுத்திறனாளிகளின் வாழ்வு மேன்மேலும் வளர வேண்டும் என்று இறைவனிடம் வேண்டுகின்றேன்.

முழுமையான நேர்காணலை www.kuralkal.com இணையத்தில் காணலாம்

LIFE PROTECT LINE

Havenley
Apartments & Hotels

RiverSure
Insurance

SpotOn
Money

Gajan's
Free
Birds

SAGA
NETWORK

NUVU - UK

accountancy group Estd. 1986

Accident Courtesy Ltd

KS & CO Accountants

REDBRIDGE Radio Cars

innovay beyond expectations

Deens of Hampton Court Servicing made simple

Child First UK

Ceylon Silks SILKS FOR ALL OCCASIONS

BTM

என்பீல்ட் நாகபூசணி அம்பாள் கோவில்






















TAMIL PARA SPORTS






DURAYAPPAH STADIUM
Most Desperate and Immediate Need : Accessible Toilets
Why are we not even worthy of that ..............?!




TAMIL PARA SPORTS
DATA

# பாதிக்கப்பட்ட சமூகத்திற்கு மாபெரும் கௌரவம் அளித்த சுயமதிப்பீட்டு மாநாடு



இலங்கையை பொறுத்தவரை 2009 ஆம் ஆண்டு போருக்கு பின்னர் தமிழ் மக்களின் நிலைமை வாழ்வியலையும், சவாலையும் மையமாகக் கொண்டதாகவே காணப்படுகின்றது.

இந்த சவால்கள் எப்படி ஆரம்பமாகின என்றால் அது போரில் அங்கவீனமான போராளிகளையும் மக்களையும் யாரும் கைதூக்கி விடாத ஒரு காரணத்தால் மட்டுமே இந்த ஆதரவு வழங்குதல், வாழ்வாதாரம் வழங்குதல், பாதுகாத்தல் இவை எல்லாவற்றுக்கும் அப்பால் அவர்களின் மன நிலையையும், பொருளாதார நிலையையும், சவால்களையும், தீர்வுகளையும் தரம் பிரித்து பார்க்க வேண்டிய எண்ணம்  யாருக்கும் தோன்றவும் இல்லை அதை செயற்படுத்த யாரும் முன்வரவும் இல்லை.

இந்த அடிப்படை விடயங்களை ஒழுங்கமைத்து சீர்படுத்தி செயற்படுத்த முனைந்த தமிழ் மாற்றுதிறனாளிகள் அமைப்பு மாநாட்டை கூட்டி முக்கிய பல விடயங்களை இலங்கை மக்களுக்கும், அரசியல் தலைமைகளுக்கும் ஏன் சாதாரண மக்களுக்கும் வெளிச்சம் போட்டு காட்டி இருக்கின்றது.

சாதாரணமாக மக்களை பற்றியும், போராட்டம் பற்றியும் கூச்சல் போடுபவர்கள் இந்த மண்ணில் அங்கவீனமாகி பலவீனப்பட்டிருக்கும் மனித உயிர்களை கண்டு கொள்ளாமல் வெற்றுக் கூச்சலிடுவது வருந்தத்தக்கது என்ற பெரும் எண்ண அலையை இந்த மாநாடு ஏற்படுத்தி இருக்கின்றது.

அரச நிறுவனங்களும், அரச சார்பற்ற நிறுவனங்களும் பாதிக்கப்பட்டவர்களை, பாதிக்கப்பட்டவர்கள் என்ற வரையறைக்குள் மட்டும் வைத்திருக்க முனையும் போது, அவர்களின் குரலையும், உரிமைகளையும் எப்படி ஓங்கி ஒலிக்க வைக்க முடியும், ஒலிக்க வைக்கலாம் என்ற புதிய எண்ணக்கருவை இந்த மாநாடு ஏற்படுத்தி வழங்கியிருக்கிறது.

பாதிக்கப்பட்டவர்கள் எத்தனை வகையாக இருக்கின்றார்கள் என்பதை கூட மாநாட்டு ஏற்பாட்டுக் குழு மிக நிதானமாக வரையறை செய்திருப்பது, சமூக அக்கறை உடையவர்களுக்கும் ஏன் அரசுக்கும் இலகுபடுத்தப்பட்ட வழிவகைகளை கைகாட்டி தெரியப்படுத்தி உள்ளது.

மனங்களை வெல்லவும், அரசியல் இலாபங்களுக்கும் அப்பால் இந்த நாட்டில் வலுவிழந்தவர்கள் மீதான பார்வை எத்தனை மேன்மை ஆனது என்பதை மாநாடு தெளிவுபடுத்துவதுடன் மற்றவர்களையும் செயற்பட தூண்டியுள்ளமை மிக வரவேற்கத்தக்க உண்மை.

உலக பொது மேடையில் எம் இனத்தவர் அங்கவீனர்களாக போடும் வாழ்வியல் போட்டி சமூகத்தின் கண்களில் என்றும் நேரலையாக தெரியப்படுத்தப்பட வேண்டும் என்ற ஆவலுடன் சீர்படுத்தப்பட்ட மாநாடு பெரும் முயற்சிகளின் படியாகவும், தூண்டுகோலாகவும் அமைந்திருக்கிறது.

மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் ஒவ்வொரு பாதிக்கப்பட்ட நபருக்கும் இருக்கும் எண்ண அலைகள் அவை காலப்போக்கில் ஏற்படுத்தப் போகும் நல்ல விடயங்கள் என்பவை தொடர்பாக அடுத்த சிற்றிதழில் ஆராய்வோம்......

(தொடரும் )








Able Tamils Association
14.06.20


DATA
Rotary
SELF-EVALUATION CONFERENCE
victims - a decade on...
பாதிக்கப்பட்டோருக்கும் அவர்களோடு பயணிப்போருக்குமான மாநாடு
1. Differently able persons.




DATA
Rotary
சுயமதிப்பீட்டு மாநாடு
SELF-EVALUATION CONFERENCE
பாதிக்கப்பட்டோருக்கும்


DATA
சுயமதிப்பீட்டு மாநாடு
பாதிக்கப்பட்டோருக்கும்




DATA
SELF-EVALUATION CONFERENCE

**தமிழ் மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் பணிப்பாளரும், மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றத்தின் செயலாளரும், மட்டக்களப்பு மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தருமான திரு.சா.அருள்மொழி அவர்கள் தமிழ் மாற்றுத்திறனாளிகள் அமைப்பிற்கு வழங்கிய ஒலி–ஒளி வடிவ நேர்காணலின் சுருக்கமான வரிவடிவம்**



மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்த வரையில் தற்போது சுமார் 7,200 மாற்றுத்திறனாளிகள் உள்ளனர்.

யுத்தம் முடிவுறுத்தப்பட்ட பின்னர் மாற்றுத்திறனாளிகள் கருத்து ஒரு பேசு பொருளாக மாற்றப்பட்டு தற்போது பெரியதொரு விடயமாகப் பேசப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆதரவற்ற சிறுவர்களுக்கான சிறுவர் இல்லங்கள் 32 உள்ளன. அதில் 700 சிறுவர்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றார்கள்.

பெண் தலைமை தாங்கும் குடும்பங்களைப் பொறுத்த வரையில் இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் எடுக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் கிட்டத்தட்ட 27,000 பெண் தலைமைத்துவ குடும்பங்கள் உள்ளன.

பிரதேசங்களுக்கான அமைப்புக்கள் மற்றும் மாவட்டத்திற்கான அமைப்பு உள்ளன. இதனூடாக உதவிகளை செய்வதற்கு பலரும் முன்வரவில்லை. தமக்கு தேவையான அரசியல்வாதியிடம் பணத்தினை அனுப்பி அவர்கள் தமது அரசியலை வளர்ப்பதற்காக இதனை செய்து வந்தனர். அது கிடைத்தவர்களுக்கே மீண்டும் மீண்டும் கிடைத்தது. ஏனையவர்களுக்கு கிடைக்கவும் இல்லை.

அரசாங்கம் சில நடைமுறைக்குட்பட்டுத்தான் சில வேலைகளை வழங்கும். அது நிறைவு பெறாமல் இருக்கும், போதாமல் இருக்கும் அது தான் திட்டம். யாருக்காகவோ போராடிய குடும்பம் வறுமையிலையே வாழ்ந்து வறுமையிலையே அடுத்த சந்ததியினரைக் காணப்போகின்றது. இவர்களைக் கண்டு கொள்ளவில்லை, உதவி செய்யவில்லை.

சமூக சேவைகளைப் பொறுத்த வரையில் மாற்றுத்திறனாளிகளுக்கான சேவைகள் ஒரு சில வசனத்தில் தான் உள்ளது. கிழக்கு மாகாண சபைக்கு அந்த அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படவில்லை. பொதுவாக கூறுவோமானால் ஒன்றுமே வழங்கப்படவில்லை. சிறுவர் திணைக்களத்தினை எடுத்துக் கொண்டோமானால், பாதி பாதி மாகாண சபைக்கு வழங்கப்பட்டிருக்கின்றது.

சமூக சேவை திணைக்களத்தைப் பொறுத்த வரையில் மாற்றுத்திறனாளிகள் சம்பந்தமாக ஒன்றுமே வழங்கப்படவில்லை என்று தான் சொல்ல வேண்டும். அனைத்துமே மத்திய அரசாங்கத்திற்குத் தான் வழங்கப்பட்டிருக்கின்றது. இருந்தாலும், எமக்கு தரப்பட்டவற்றை வைத்துக் கொண்டு நிறைவான சேவையினை கிழக்கு மாகாண சபை வழங்கிக் கொண்டிருக்கின்றது.

உத்தியோகத்தர்களின் அர்ப்பணிப்பான செயற்பாட்டினூடாக  கிழக்கு மாகாண சபை மாற்றுத்திறனாளிகளுக்கு வேலை செய்ய வேண்டும் என்பது இல்லை. மாற்றுத்திறனாளிகள் தினத்தினை மார்கழி மாதம் 3ம் திகதி நடாத்திவிட்டு இருக்கலாம், அத்தோடு அவர்களுக்கான உபகரணங்களை வழங்குதல் அதுதான் எமக்கு தரப்பட்டிருக்கின்றது. இதைவிட செய்ய வேண்டாம் என்று எங்கேயும் கூறவில்லை.  செய்ய வேண்டும் என்றும் கூறப்படவில்லை. ஆனால் மத்திய அரசிற்குக் கீழ் அவை அனைத்தும் வழங்கப்பட்டிருக்கின்றது.

DATA அமைப்பு மாநாடு ஒன்றை நடாத்தியிருந்தது.  வெற்றிகரமாக அமைந்த அந்த மாநாட்டில் பிரகடனங்கள் நிறைவேற்றப்பட்டு அவற்றை அனைத்து இடங்களுக்கும் கையளிக்கப்படும் நடவடிக்கைகள் நடைபெற்ற வண்ணம் உள்ளன. கிழக்கு மாகாணத்தில் மாநாடு ஒன்றை உடனடியாக நடாத்த வேண்டிய தேவையை உணர்ந்து மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் மட்டக்களப்பு மாற்றுத்திறனாளிகள் அமைப்பை தனிப்பட்ட ரீதியில் அழைத்து அதனை முன்னெடுத்து வருகின்றார்.

சமூக சேவை திணைக்களத்திற்கு மிக குறைந்த நிதியே வழங்கப்பட்டு வருகின்றது. ஆனால் 24 மணித்தியாலம் மனநிறைவாக சேவையாற்ற கூடிய சமூக சேவை உத்தியோகத்தர்கள் உள்ளனர். இது ஒரு வருமானம் தருகின்ற திணைக்களம் இல்லை ஆனால் மக்களுக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுகின்ற திணைக்களம். இந்த சேவையை மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள தமிழ், முஸ்லீம் சமூக சேவை உத்தியோகத்தர்கள் சிறப்பானமுறையில் சேவையாற்றுகின்றார்கள். மட்டக்களப்பு மாவட்டத்தில் சேவையாற்றுகின்ற ஏனைய அமைப்புக்களுடனும் இணைந்து சரி சமமாக செயலாற்றி இச் சேவைகளை நாம் நிறைவாக எமது மாற்றுத்திறனாளிகளுக்கு பெற்றுக் கொடுக்கின்றோம்.

13வது சட்ட திருத்தத்தைக் கருத்திற் கொண்டு சமூக சேவைகள் திணைக்களத்தை வலுப் பெறுகின்ற திணைக்களமாக மாற்றக்கூடியவாறு இருக்குமாயின் அது மிக பெறுமதியான சேவைகளை நாம் ஆற்றக் கூடியவாறு இருக்கும்.




முழுமையான நேர்காணலை www.kuralkal.com இணையத்தில் காணலாம்



2018ம் ஆண்டு அரசியல் களத்திலே ஒருவராக உள்வாங்கப்பட்டேன். அதற்கு முன்னர் பார்க்கின்ற சந்தர்ப்பத்தில் பாராளுமன்றம் வரை பேசக்கூடிய ஒரு மாற்றுத்திறனாளியாக திருமதி. சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா அம்மையார் அவர்கள் பாராளுமன்ற உறுப்பினராக எல்லோருமே அறியக்கூடிய வகையில் செயற்படுகின்றார்.

அதே போல பச்சிலைப்பள்ளி பிரதேச சபையில் ஒரு மாற்றுத்திறனாளி இருக்கின்றார். ஏனைய பிரதேச சபைகளிலும் இம்முறை நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தலில் கணிசமாக மாற்றுத்திறனாளிகள் உள்வாங்கப்பட்டிருக்கின்றார்கள் என்பதனை குறிப்பிட்டு சொல்லலாம். நாம் எதிர்பார்க்கின்ற வேலைத்திட்டங்களை அரசியலால் மட்டும் தீர்த்துவிட முடியாது. எல்லோருக்குமே தெரிந்த விடயம் சாதாரணமாக நான் ஒரு பிரசே சபை உறுப்பினர். என்னாலான சேவையை செய்வதற்கு பிரதேச சபை ஒரு தளமாக இயங்கி வருகின்றது.

பாதிக்கப்பட்ட சமூகம் மற்றும் மாற்றுத்திறனாளிகள் தொடர்பாக பேசுவதற்கான வல்லமை கொண்டவர்களாக அரசியல் பிரமுகர்கள் இருக்கின்றார்கள். அரசியலால் சாதிக்கக் கூடிய முயற்சிகளை நாம் ஒரு மையப்புள்ளியில் இருந்து ஆரம்பிப்போமானால் பொதுவாக கொள்கை ஒன்றினை உருவாக்கி அதிலிருந்து சில விடயங்களை கொண்டு செல்வோம்.

புலம்பெயர்ந்த உறவுகள் என்றாலும் சரி, இங்கே இருப்பவர்கள் என்றாலும் சரி பாதிக்கப்பட்ட சமூகம் என்பது ஏதோ ஒரு விதத்தில் தங்களை பாதிப்பிற்குள்ளாக்கியவர்கள் தான்.

மாற்றுத்திறனாளி அமைப்புக்கள், முதியோர் அமைப்புக்கள், சிறுவர் அமைப்புக்கள் தங்களை நிறுவனமயப்படுத்தி வளர்ந்திருக்கின்றார்கள். அதனை மறுக்கவே முடியாது. 2009ற்கு பின்னர் கூடுதலானவர்கள் நிறுவனங்களாக பதியப்பட்டு தங்களுடைய சேவையை வழங்க கூடியவர்களாகவும், தனித்துவமாக செயற்பட கூடியவர்களாகவும் இருக்கின்றார்கள்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் நிறுவனமயப்படுத்தலின் ஊடாக மாற்றுத்திறனாளி அமைப்புக்கள், மாற்றுத்திறனாளிகள் ஓரளவிற்கு சமூகத்தில் பேசக்கூடியவர்களாக முன்னேறியிருக்கின்றார்கள். இந்த இடத்தில் அனைத்து அமைப்புக்களையும் பாராட்ட வேண்டிய தேவைப்பாடு இருக்கின்றது.

ஆனால் அமைப்புக்கள் இணைந்து செயற்பட வேண்டிய சூழல் கட்டாயம் இருக்கின்றது. ஒரு முழுமையான இலக்கை நாம் அடைய வேண்டுமாக இருந்தால் நாம் இணைந்து செயற்படுவதன் ஊடாக அதனை பெற்றுக்கொள்ள முடியும். அவை எல்லோருடைய மனோநிலையிலும் மாற்றம் வரவேண்டியவையாக இருக்கின்றது.

நாம் இணைவோமாக இருந்தால் அநேகமான விடயங்களை சாதிக்கலாம். இணைந்து செயற்படக் கூடிய செயற்திட்டங்களை தான் முன்நோக்கி கொண்டு செல்லக் கூடியதாக இருக்கும். எப்போதும் குரல் கொடுப்பவர்கள் தனித்து நின்று குரல் கொடுப்பதைவிட இணைந்து நின்று குரல் கொடுப்பது என்பது அது எங்கேயும் ஒலிக்கும்.

நான் என்னுடைய வலைத்தளங்களில் இவ்வாறான விடயங்களை வெளிக் கொண்டு வருவது எல்லோரும் பார்க்க வேண்டும், கரிசனை செலுத்த வேண்டும். என்பதற்காகத்தான். இந்த விடயங்களை யார் வெளிக் கொண்டுவர வேண்டும் என்றால் ஒவ்வொரு தனிப்பட்டவரும் தங்களுடைய பாதிப்பை, தேவையை வெளிக்கொண்டு வருகின்ற சந்தர்ப்பத்தில் தான் அது சமூகத்திற்கு சிறந்த ஒரு தேவையான விடயமாக எடுத்துக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

மருத்துவ சிகிச்சைகள் என்ற வகையில் மாற்றுத்திறனாளிகளுக்கான புற்றுநோய்கள், அவர்களது சிறுநீரக பாதிப்பு, அழுத்தப்புண் என்பன உயிர்க்கொல்லியாக இருக்கின்றன. உதவிகளை கோரும் போது செய்ய முடியாத சூழல் இருக்கின்றது. அரசாங்கத்தினாலும் இவ்வாறானவர்களுக்கு சிறப்பான விசேட மருத்துவ வசதி செய்யப்படாமல் இருக்கின்றது.

பாதிக்கப்பட்டவர்களுக்கு வைத்தியசாலைகளில் விசேட வசதிகள் காணப்படவில்லை. சாதாரண மனிதர்களுக்கு இருக்கின்ற வசதிகள் தான் காணப்படுகின்றது. விசேடமான அலகு, விசேடமாக சிகிச்சை அளிக்கக்கூடிய இடங்களோ இல்லை.

மருத்துவ சிகிச்சைக்கு கூடுதலான தொகைகளை செலுத்தாவிட்டாலும் சிறு சிறு தொகைகளை செலுத்தி காப்பாற்றுவோமானால் மேலும் குறிப்பிட்ட காலத்திற்கு அவர்களை வாழவைக்க முடியும்.



முழுமையான நேர்காணலை www.kuralkal.com இணையத்தில் காணலாம்






ABC






667




5
13
















தமிழ் மாற்றுத்திறனாளிகள் விளையாட்டுவிழா - 2018
01
03

BGD
BRAGAPHAY GRAPHIC DESIGNER
071 7939 246

CASUARINA tree
Restaurant & Bar

Jaylux digital
Our clicks, your history

SOORIYA
SOUND & LIGHT

ags
production services
AUDIO | LIGHTING | VISUALS | CONCERTS

AVS
ARANTHA SOUND
077 800 10000

FOCUSCIA
Production Services

Lotus Caring Hands

LONGTEK
our business
protects your business
CCTV, Alarm & Fire Alarm Specialist
080 0511 8611

LINKS LEGAL
SOLICITORS
Committed to Excellence

நம்நாதம்
ஈழத் தமிழர்களின் இதய நாதம்

UTHA

l·mobi mobile
A BRAND for DUAL SIM PHONES

FENIX
PROPERTY SERVICES

Tamil Women's Voices UK

SUGUN™
Cheap & Quality App Calls

SAKTHI CASH & CARRY

Goran Gates

TROPICAL EXOTIC
SEA FOODS (PVT) LTD.

nachiyar
events

MIA Mortgage Insurance Advisers
Life Insurance Quote & Buy
Property Insurance Quote & Buy
Mortgages

BRIT BRICKS

GLENMORE PROPERTIES

# RAJ CLUSTER LTD




Trade Name of Shell Forecourts in Hampshire & Surrey

www.rajcl.com info@rajcl.com

**SHELL FLEET**
22 Fleet Road
Fleet
Hampshire, GU51 4QG
Tel: 01252 617 577

**SHELL FLEET ROAD**
171 Cove Road
Fleet
Hampshire, GU51 2SH
Tel: 01252 615 686

**SHELL FARNBOROUGH**
326 Farnborough Road
Farnborough
Hampshire, GU14 8BD
Tel: 01252 549 645

**SHELL CODY**
22 Farnborough Road
Farnborough
Hampshire, GU14 6AY
Tel: 01252 547 640

**SHELL FOLLY HILL**
Odiham Road, Upper Hale
Farnham
Surrey, GU10 5AB

**SHELL OLD WOKING**
65 High Street
Old Woking, Woking
Surrey, GU22 9LN
Tel: 01483 728 603

**SHELL OTTERSHAW**
Guildford Road
Ottershaw
Surrey, KT16 0PG
Tel: 01932 873 758

**SHELL MEADOWS**
Woodbridge Road
Guildford
Surrey, GU1 1EF
Tel: 01483 459 280

**SHELL LADYMEAD**
14 Ladymead Road
Guildford
Surrey, GU1 1DL
Tel: 01483 458 442

**SHELL TOPCLIFFE**
Portsmouth Road
Peasmarsh, Guildford
Surrey, GU3 1LZ
Tel: 01483 457 293

**SHELL HORSLEY**
Guildford Road
Leatherhead
Surrey, KT24 6TA
Tel: 01483 280 759












